★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 28உ வியாழன் (13—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 29உ வெள்ளி (14—12—56) [இதழ் 160

எப்பொழுதும் வழங்கப்படாத பெரிய தொகை

நோபல் பரிசு பெற்றோருக்கு வழங்கப்படும்

இந்த ஆண்டு வழங்கப்படும் நோபல் பரிசுகள், இதுவரை வழங்கப்படாத அளவு மிகப் பெருந்தொகையாக வழங்கப்படுமாம்! 2,00,122 சுவீடன் 'க்ரோனர்'கள்—அதாவது, சுமார் 40,000 டாலர்கள் பரிசாக வழங்கப்படுமாம்.

இதுவரை, இவ்வளவு பெரிய தொகை பரிசாக அளிக்கப்பட்டதில்லையாம்! ராமன்ஜிம் மெனெஸ் என்ற ஸ்பானிஷ் கவிஞர்தான் முழு தொகையையும் பெறுவார் என்றும், விஞ்ஞானத்திற்கான பரிசினை பலர் பகிர்ந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தென்னாட்டு ரப்பர் தொழிலை அழிக்க டில்லி சதி!

கேரள இயற்கை இரப்பர் உற்பத்திக்கு உலைவைக்கவா உ.பி.-யில் செயற்கை இரப்பர் தொழிற்சாலை?

'இயற்கை வளம் ஏராளமாயிருக்கும்போது செயற்கை உற்பத்திக்கு வழிசெய்வானேன்?

கேரள இரப்பர் உற்பத்தியாளர் குமுறல்?

எர்ணாகுளம், டிச. 11—

தென்னாட்டு இரப்பர் தொழிலை அழித்து ஒழிக்க டில்லிப் பெரியவர்கள் சதித் திட்டம் தீட்டியிருக்கும் செய்தி தரப்படுகிறது.

பொதுவாகத் தென்னாட்டை தொழில் வளமற்ற பிரதேசமாக்க வேண்டும் என்ற அவர்களது மூலநோக்கத்திற்கு ஒப்பவே, இந்த சதித் திட்டமும் அமைந்திருக்கிறது என ஐயுறவேண்டியதாயுள்ளது.

கேரளத்தில்

இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த இரப்பரில் 91 சதவிகிதம் கேரளத்தில் உற்பத்தியாகிறது. இந்த இயற்கை இரப்பர் உற்பத்தியை அழித்து ஒழிக்கும் நோக்குடன், உத்தரபிரதேசத்தில் (வடநாட்டில்) ஒரு செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலையைத் துவங்க டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

'இந்த செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலை, தென்னாட்டின் இயற்கையான இரப்பர் உற்பத்தியைப் பாதிக்கும்,' என்று தென் கேரள இரப்பர் தோட்டத் தொழில் சங்கத்தவர், டில்லியிடம் முறையிட்டிருப்பதாக ஒரு பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

நிலைமை என்ன?

ஆண்டுதோறும் இப்போது இந்தியாவில் 23,000 டன் இரப்பர் உற்பத்தியாகிறது; மேலும் 5,000 டன் தேவையைச் சரிக்கட்ட இறக்குமதி செய்யவேண்டியுள்ளது.

"ஆனல் திட்டக்குழு, 1960-ம் ஆண்டில் இரப்பர் தேவை 40,000 டன்னாக இருக்கும் என்று கணக்கிட்டு, இப்போதைய உற்பத்தியை விட 17,000 டன் அதிகம் இரப்பர் வேண்டும் என்று கூறியிருக்கிறது

நாங்கள் தருகிறோம்

'இந்த அதிகரிக்கும் தேவையை, இயற்கையான இரப்பர் உற்பத்தியின் மூலம் நாங்கள் தரமுடியும்—தருகிறோம் என்று உறுதிமொழி கூறியிருந்தும் டில்லி சர்க்கார், உத்திரப் பிரதேசத்தில் செயற்கை இரப்பர் உற்பத்திக்குத் தொழிற்சாலை நிறுவுவதேன் என்று தெரியவில்லை,' என்று அந்தச் சங்கம் தன் முறையீட்டில் கேட்டிருக்கிறது.

'இந்தியாவின் இரப்பர் தேவை எவ்வளவு ஆனாலும், சர்க்கார் உதவி செய்யுமானால், கேரளத்திலேயே அந்தத் தேவைக்கு ஏற்ப இயற்கை இரப்பர் உற்பத்தி செய்து தரமுடியும்' என்றும் சங்கம் கூறியிருக்கிறது.

'ஏராளமான தரிசு நிலங்களும், காடுகளும் இரப்பர் பயிரிடத்தக்கனவாக இருக்கின்றன; எனவே, இன்னும் இரண்டு அல்லது மூன்று இலட்சம் ஏகர் நிலத்தில் இரப்பர் பயிரிட்டால் சுமார் 60,000 டன் இரப்பர் உற்பத்தி செய்யமுடியும். இத்தனை இயற்கை வளம் கேரளத்தில் இருந்தும் உ. பி.-யில் செயற்கை உற்பத்தித் தொழிற்சாலை ஏன்?'

வெள்ளத் தடுப்புக்கு ரூ. 60 கோடியாம்!

புதுடில்லி, டிச. 13—

"வெள்ளத் தடுப்புக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

ஒரு இலட்சம் பேர் வாக்குரிமை இழந்தனர்

போபால், டிச. 13—

புதிய மாநில அமைப்பின் விளைவாக சுமார் 1 இலட்சம் அரசாங்க ஊழியர்கள், தாங்கள் வாக்குரிமை பெற்ற இடங்களைவிட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனராம். வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்கு இயலவில்லையாம்; எனவே அவர்கள் பொதுத் தேர்தலின் போது, தாங்கள் விரும்பும் அபேட்சகர்களுக்குத் தங்கள் வாக்குரிமையைத் தபால் மூலம் அனுப்பவும் அந்த வாக்குகள் செல்லுபடியாவதற்கும் பிரத்தியேக உத்தரவுகள் இப்போது தேவைப்படுமெனத் தெரிகிறது.

கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு குன்றென உயர்ந்தவர் அம்பேத்கார்

அழகான ஓவியம் அழிந்துவிட்டது — ஒளிகாட்டியவிளக்கு அணைந்துவிட்டது!

தலைசிறந்த பகுத்தறிவுவாதியை இழந்துவிட்டோம்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் இரங்கலுரை

"ஒரு பெருந்தலைவராய் விளங்கிய நல்லுருவம் சிதைந்துவிட்டது; அழகான ஓவியம் அழிந்துவிட்டது; ஒளி காட்டிய விளக்கு அணைந்துவிட்டது; டாக்டர் அம்பேத்கார் மறைந்துவிட்டார்.

"அவரது மறைவு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

"அவரது மறைவு கேட்டதும், மராட்டியம் முழுவதும் அழுதிருக்கிறது. பல இலட்சக்கணக்கான மக்கள் பம்பாயில், அவரது சவ அடக்க ஊர்வலத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

"மனிதர்கள் பலர் பிறக்கிறார்கள்—இறக்கிறார்கள்; ஆனால், எல்லோருமே டாக்டர் அம்பேத்கார் போன்று, சீரிய பொதுநலத் தொண்டர்களாயிருந்துவிடுவதில்லை. பம்பாயில் மட்டும் 5 லட்சம் மக்கள் அவரது சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டிருக்கின்றனரென்றால், டாக்டர் அம்பேத்கார் மக்களிடை பெற்றிருந்த மதிப்புத்தான் எவ்வளவு?

"அவரது மறைவால் ஏற்பட்டுள்ள காலி இடத்தை எப்படி நிரப்புவது?—என்ற ஏக்கத்தோடு அத்தனை மக்களும் அழுது புலம்பியிருக்கிறார்கள்; அவர் ஆற்றிய தொண்டுகளை நினைந்து நினைந்து மக்கள் கண்ணீர் உகுத்திருக்கிறார்கள். நம்மால் அவரது மறைவு தரும் துக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை,"

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், டாக்டர் அம்பேத்கார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 11—12—56 அன்று தி. மு. கழகத் தலைமை நிலையச் சார்பில், சென்னை—வண்ணை, கல்லறை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கலைஞர்கள்மீது பண்டிதர் பாய்ச்சல்!

பொருமைக்காரர்களாம்! சண்டையிட்டுக்கொள்கிறார்களாம்!

கலாச்சாரத் தூதுக் குழுக்கள் பற்றி மக்கள் சபையில் விவாதம்

புதுடில்லி, டிச. 12—

பண்டித நேரு, கலைஞர்கள்மீது பாய்ந்திருக்கிறார்! அவர்களது குண விசேடங்களைக் கடிந்திருக்கிறார், மக்கள் சபையில்!

கலாச்சாரத் தூதுக் குழு

அண்மையில் உதவி வெளி விவகார மந்திரி ஏ. கே. சந்தாவின் தலைமையில் ரஷ்யா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற கலாச்சாரத் தூதுக் குழு பற்றி விவாதம் நடைபெற்றது.

உறவினர்கள்........

'அந்தத் தூதுக் குழுவில் தலைவரின் உறவினர்களே இடம் பெறச் செய்யப்பட்டது ஏன்? தூதுக் குழுவைத் தேர்ந்தெடுப்பது தனியொருவரின் முடிவாக ஏன் இருக்கவேண்டும்?' என்று ஒரு உறுப்பினர் சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுத்திருக்கிறார்.

பண்டிதரின் பதில்

"கடந்த காலத்தில் தூதுக் குழுவில் எவரெவரைச் சேர்த்துக் கொள்வது என்ற விவகாரத்தில், முறையேதும் இன்றி அவசர அவசரமாக நடந்துகொண்டது உண்மைதான்" என்று பண்டிதர் ஒப்பியிருக்கிறார்.

ஆனால்........

"ஆனல், கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதில், மிகுந்த கஷ்டங்கள் இருக்கின்றன," என்றும் கூறியிருக்கிறார்.

கஷ்டங்கள்

"உயர்ந்த ரக இசை வல்லுநர்கள், கலைஞர்கள், நடிகர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினால், அவர்களது திறமையை வெளிநாடுகளிலுள்ளோர் அனுபவிக்க முடியாது போய்விடுகிறது.

"கலைஞர்களை ஒன்று கூட்டி ஒரு குழுவாகச் சேர்ப்பதே பெரிய கடினமான விவகாரமாயிருக்கிறது.

"சில நேரங்களில் அவர்களிடை பொருமை தலைதூக்கிவிடுகிறது.

"எவர் முதலில் வருகிறார்கள்? எவருக்கு ஐந்து நிமிடம் அதிகம் கிடைக்கிறது? எவருக்கு ஐந்து நிமிடம் குறைவாகக் கிடைக்கிறது?—என்று பொருமைப்படுகிறார்கள்

"பெண் கலைஞர்கள் நல்லவர்கள்தான்; ஆனல் அவர்கள் சில நேரங்களில் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள். அவர்களைக் கவனிப்பதற்கு என்று ஒரு பெண் கூடவே செல்ல வேண்டியிருக்கிறது" என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

டில்லியில்......!

"ரஷ்யா முதலிய நாடுகளுக்குச் செல்லுமுன், சந்தா தலைமையில் சென்ற தூதுக்குழு டில்லியில் நடத்திக் காட்டிய காட்சிகள் வெகுவாகக் கண்டிக்கப்பட்டன; ஆனல் அந்தக் குழு, ரஷ்யா முதலிய நாடுகளில் வழக்கத்திற்கு மாறான — எதிர்பார்த்ததைவிட அதிகமான வெற்றியைப் பெற்றதாக அந்த நாட்டில் உள்ள நமது தூதவர்கள் எழுதியிருக்கின்றனர்"

என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்.

உறவினர் விவகாரம்

"உறவினர்களையே சந்தா அழைத்துக்கொண்டு போனார்— என்று கூறினார்கள்; சந்தாவின் மனைவி பெண் கலைஞர்களைக் கவனிப்பதற்காகச் சென்றார்.

"குழுவில் இடம் பெற்றிருந்த ஒரு பெண் கலைஞர், சந்தாவின் சகோதரியினது பேத்தியாக இருந்தார்; அவ்வளவுதான்.

"சந்தாவின் மகன், செக்கோஸ்லோவேக்கியாவிற்கு தனது சொந்தச் செலவில் சென்று திரும்பினார்; அதற்கும் தூதுக் குழுவிற்கும் சம்பந்தமில்லை" என்றும் பண்டிதர் விளக்கம் கூறியிருக்கிறார்.

மைலாப்பூருக்கு சுலபம்!

'டாக்டர் அம்பேத்கார், பல பல்கலைக் கழகப் பட்டங்கள் படித்தவர்; அவர் அத்தனை படிப்பதற்கு எத்தனை கஷ்டப்பட்டிருப்பார்? மைலாப்பூருக்கும் மாம்பலத்திற்கும் பல்கலைக் கழகங்களில் நுழைவது எளிது. பரம்பரை பரம்பரையாய் படித்து வருபவர்கள், கல்லூரிகளில் நுழைந்து பட்டப்படிப்பில் தேர்ச்சி பெறுவது சுலபம். ஆனல், ஆண்டாண்டுக் காலமாய் சண்டாளர்கள்— தீண்டப்படாதவர்கள் —பார்க்கக் கூடாதவர்கள் என்று பழிக்கப்பட்டு, ஊருக்கு ஒதுக்குப்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—12—'56 வியாழன்

'பறிபோகாத தமிழ்நாட்டுச் செல்வம்'

நாதசுர இசைப்பெரும் புலவர் திருவாடுதுறை டி. என். இராசரத்தினம் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்; 'தமிழகத்தின் பறிபோகாத செல்வம்' பறிபோய் விட்டது.

தமிழ் மொழிப்பற்றும் தாயகப்பற்றும் கொண்ட ஒரு பெரும் இசை வல்லுநர், நமக்கெல்லாம்—தமிழராய்ப் பிறந்த அனைவர்க்கும் பெருமை தந்து கொண்டிருந்த பெரும் புலவர் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டார்.

உலகில் இன்று பல்கிப் பெருகிக் காணப்படும் இசைக் கருவிகளில் எல்லாம், நளினமும் எளிமையும் இனிமையும் மிக்கது நாதசுர இசைக் கருவிதான். இந்த இசைக் கருவியிலிருந்து எழுகிற நாதம், உலகில் வேறெந்த இசைக்கருவியாலும் தனித்து எழுப்பப்பட முடியாத ஒன்றாகும். அதுமட்டுமல்ல; நாதசுரக் குழல் மூலம், உலகில் உள்ள பல இசைக் கருவிகள் எழுப்பும் நாதத்தையும் ஒருசேர எழுப்ப முடியும்.

நமது அண்ணா அவர்கள், திரு. இராசரத்தினம் அவர்களை ஒருமுறை பாராட்டிப் பேசுகையில், 'மேலைநாட்டில் இசையைப் பல துண்டுகளாக்கி, ஒவ்வொரு துண்டினையும் தனித்தனிக் கருவிகளால் ஒன்று சேர்த்து அனுபவிக்கிறார்கள். சுமார் 40 இசைக் கருவிகள் ஒருசேர இயக்கப்படும்போதுதான் இனிமையான இசை அங்கு எழுகிறது. ஆனால், நம் இராசரத்தினம் அவர்கள், ஒரு இரண்டரை அடிக் குழாய் மூலம், மேலைநாட்டில் 40 கருவிகள் தருகிற இசை இன்பத்தைத் தருகிறார்' என்று குறிப்பிட்டார்கள். அத்தனை பெருமைமிக்கது இந்த நாதசுரக் கருவி. அந்த இசைக் கலைக்கு, அகில உலகிலும் பெருமை தேடித்தந்த கலைஞராய்த் திகழ்ந்தார் திரு. இராசரத்தினம். நாதசுர இசைக் கலையில் திரு. இராசரத்தினம் அவர்கள், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மன்னராகத் திகழ்ந்தார்.

இசை, ஒரு நாட்டு மக்களின் கலைத்துறைச் சாதனைகளை அளவிட்டுக் காட்டும் பெருமைக்குரியது என்பது மட்டுமின்றி, உணர்ச்சியும எழுச்சியும மகிழ்ச்சியும் ஊட்ட வல்ல இன்பச் சுனையுங்கூட!

முறையான இனிமை கலந்த இசை எவரையும் எளிதில் வயப்படுத்துவதாகும். அதிலும தமிழ் இசை, பண்டைப் பெருமையும் சிறப்பும் கொண்டது.

தமிழிசையில், குரலிசையை விட நாதசுர இசைதான் மக்களுக்கு மிகுந்த இன்பமளிக்கும இசையாக இருந்து வந்திருக்கிறது.

தமிழருக்கு மட்டுமே பெருமைதரக்கூடிய இந்த நாதசுர இசைக்கே புத்துயிரூட்டி, சிறப்பும் புகழும் தேடித் தந்தவர் இராசரத்தினம் அவர்களாவார்.

தமிழ் இசை, திரு. இராசரத்தினம் அவர்களது இசைப் புலமையால் பெருமைபெற்றது என்றால், அது மிகையாகாது.

கணக்கற்ற 'இராக'ங்கள், எண்ணற்ற 'தாள'ங்கள் போன்ற கட்டுப்பாடுகளால் நயமும், இனிமையும் கொண்ட தமிழ் இசைக் கலையின் வளர்ச்சிக்குப் பெரும் புலவரான திரு. இராசரத்தினம் அவர்களது மறைவு ஈடுசெய்யவே இயலாத பெரு நஷ்டமாகும்.

உலகின் வேறெந்த நாட்டு இசைக் கலையையும் பயிலுவதற்குத் தேவையான அறிவையும் ஆற்றலையும்விட, தமிழ் இசைக் கலையில் பயிற்சி பெறுவதற்கு அதிகமான அறிவும் ஆற்றலும் தேவை. அந்தக் கலையில் தேர்ச்சி பெறுவதற்கு அதனினும் நுண்ணிய அறிவும பேராற்றலும் தேவை. நாதசுர இசைக் கலை மன்னராகத் திகழ்ந்த திரு. இராசரத்தினம் அவர்கள், தமிழ் இசையில் இன்று பெரிய 'வித்துவான்கள்' என்று மயிலை வட்டாரங்களால் புகழப்படுபவர்களைவிடத் திறமையும் தேர்ச்சியும் பெற்றவராவார். தமிழ் இசைக் கலையில், அபூர்வமான ஞானம் படைத்தவராக அவர் விளங்கினார்.

இசை உலகில் எவரும் எட்டிப் பார்க்கமுடியாத கற்பனா சக்தி படைத்தவராக விளங்கினார் திரு. இராசரத்தினம்.

'அக்கிரகார'த்துப் பெரிய பாடகர்கள், மிகச் சிரமப்பட்டு பாடக்கூடிய இராகங்களை—வெகு கஷ்டப்பட்டுத் தொடக்கூடிய 'உச்சங்களை,' வெகு அநாயாசமாக எளிதில் பாடுவார்—தொடுவார்-திரு. இராசரத்தினம்! பலரால் அறியமுடியாது கிடந்த பல இராகங்களுக்கு உயிர் தந்தவர் இராசரத்தினம். இசைத்துறைக்கு அவர் ஆற்றியுள்ள பணிகளுக்குத் தமிழ் இசை உலகு என்றென்றும் கடப்பாடுடையது.

திரு. இராசரத்தினம் அவர்கள், நாதசுரம் மூலம் எழுப்பும் நாதவெள்ளத்தின் இனிமையும கவர்ச்சியும், நினைக்குந்தோறெல்லாம் சுவை தருவதாகும்.

அவர், வீணையின் இனிமையை—குழலின் குழைவை—முழவின் ஒலியை நாதசுரத்தின் மூலம் ஆச்சரியப்படத்தக்கவகையில் எழுப்பும்போது, அந்த கானமழையில் நனைபவர்கள் கள்ளுண்டவர்போலக் கட்டுண்டுக் கிடப்பர்.

அத்தகு நயமும் இனிமையும் செறிந்த இசையுணவு ஈந்து வந்த, பறிபோகாத தமிழ் நாட்டுச் செல்வம் நம்மிடமிருந்து பறிபோய் விட்டது — நம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு!

திரு. இராசரத்தினம் அவர்கள், டில்லிப் பேரரசின் பாராட்டுப் பத்திரம் பெற்றவர் என்றாலும், தமிழ் மக்களால் உரிய வகையில் பாராட்டப்படவில்லைதான். இயற்கை இத்தனை சீக்கிரம் அவரை நம்மிடமிருந்து தட்டிப் பறித்துக் கொள்ளும் என்று எவர் நினைத்திருப்பர்?

அவரது மறைவு, தமிழ் இசை உலகுக்கும் தமிழருக்கும் ஈடு செய்ய முடியாத பெரு நஷ்டமாகும். அவரைப்போன்ற இசை விற்பன்னர்—வல்லுநர்—தெளிந்த ஞானமும் பரந்த கற்பனைத் திறனும், உயரிய பலன்மிகு ஆராய்ச்சி அறிவும் கொண்ட இசைக் கலைஞர் எளிதில் தோன்றிவிட முடியாதே என்றெண்ணும்போது நமது துக்கம் இரட்டிப்பாகிறது.

நமக்குப் பெருமை தந்து கொண்டிருந்த அந்த இசைப் பெரும புலவன், தான் வாழ்ந்த நாட்களில் இசைத்த இனிய கானங்கள், இன்னும் நம செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன என்றாலும், இனி எப்போது அவற்றைக் கேட்கப்போகிறோம்?

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தாருக்கும் கலைஞர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம.

மருத்துவத் துறையில் அணுசக்தி உபயோகம்

இந்தியாவின் நிலைபற்றி மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, டிச 11—

மருத்துவ சிகிச்சைக்கு அணுசக்தியை உபயோகிப்பது சம்பந்தமாய் இந்தியாவில் நடந்துவரும் நடவடிக்கைகள் பற்றி மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சமாதான காரியங்களுக்கு அணுசக்திப் பிரயோகமானது சாத்தியமான பிறகு, ஆராய்ச்சிக்கும் சிகிச்சைக்கும் ரேடியோ ஐசோடோப்புகள் கிடைத்துவருகின்றன. இதுவரையில், ரேடியோ ஐசோடோப்புகள், மனித உடலில் பலவகை உணவுப் பொருள்கள் என்னவித மாறுதல்களை அடைகின்றன என்பதை கவனிப்பதற்கே பெரிதும் பயன்பட்டுவருகின்றன.

சிகிச்சைத் துறையில் ரேடியோ கதிர் இயக்க-ஐயோடின், பாஸ்பரஸ், தங்கம் ஆகியவை புற்று நோய், தைராய்டு வியாதிகள், இரத்த வியாதிகள் முதலியவைகளைக் குணப்படுத்துவதற்கு உபயோகப்படுகின்றன.

இந்தியாவில், பம்பாய் புற்று நோய் ஆராய்ச்சிசாலையத்தில் ஐசோடோப் ஆராய்ச்சி நடந்துவருகிறது. கல்கத்தா சித்தரஞ்சன் புற்று நோய் ஆஸ்பத்திரி, கல்கத்தா சர்வகலாசாலைத் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவைகளிலும் இந்த ஆராய்ச்சி நடக்கிறது. ஆனால் ரேடியோ கதிர் இயக்க ஐசோடோப்புகள் தாராளமாகக் கிடைக்காதபடியால் அதிக ஆராய்ச்சி வேலை நடக்க முடியவில்லை. ஐசோடோப்புகள் உற்பத்தியாகிற நாடுகளிலிருந்து அவை தாராளமாக கிடைக்காதது மாத்திரமின்றி, விலை மிக அதிகமாக இருப்பதும் அதற்குத் தடையாக இருக்கிறது.

இந்தியாவில் அணுசக்தி உலை ஏற்பட்டபின் சிறிதளவாவது ஐசோடோப்புகள் தாராளமாகக் கிடைக்கும்; அதைக்கொண்டு ஆராய்ச்சியைத் துரிதமாக நடத்தலாம்.

உலகக் காசநோய் மாநாடு: 700 பிரதிநிதிகள்!

புதுடில்லி, டிச. 12—

1957 சனவரித் திங்கள் 7-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் உலகக் காசநோய் மாநாட்டிற்கு 49 நாடுகளிலிருந்து 700 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களாம்.

தீயணைக்கும் படையினர் வேலை நிறுத்தம்

கல்கத்தா, டிச. 11—

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 1,200 தீயணைக்கும் படையினர் சம்பள உயர்வும், பிற கோரிக்கைகளையும் விடுத்து வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

பொதுமக்களுக்குப் பாதகம் ஏற்படாமலிருக்கத் தீ அணைக்கும் வேலையை மட்டும் அவர்கள் செய்து வருகின்றனர்; மற்ற வேலைகளை அவர்கள் செய்வதில்லை

'கோல்டு கோஸ்ட்' சுதந்திரம் பெறுகிறது!

நியூயார்க், டிச. 12—

ஆப்பிரிக்காவிலுள்ள 'கோல்ட் கோஸ்ட்' என்னும் நாடு 1957 மார்ச் 6-ந் தேதியிலிருந்து சுதந்திரம் பெறுகிறது.

தற்போது 'கோல்ட் கோஸ்ட்' பிரிட்டிஷ் வசம் உள்ளது

சுதந்திரம் பெற்ற பின்னர் அந்த நாட்டுக்கு 'கானா' என்று புதிய பெயர் வைக்கப்படும்.

சுதந்திர விழாவுக்காக ரூ. 1 கோடி செலவு செய்யப்படுமாம்.

தான் நாடற்றவர் ஆக்கிய 'இந்தியர்'

புள்ளி விவரம் தருகிறார் பண்டாரநாயகா

கொழும்பு, டிச. 11—

அக்டோபர் திங்கள்வரை மொத்தம் 50,670 இந்தியர்களுக்கு இலங்கையில் குடி உரிமையளிக்கப் பட்டுள்ளதாம்.

மொத்தம் 2,37,034 மனுக்கள் வரப்பெற்றனவாம்.

இன்னும் முடிவு செய்யப்படாமல் இருக்கும் மனுக்களின் எண்ணிக்கை 83,435 என்றும், இதுவரையில் 1,32,589 மனுக்கள் நிராகரிக்கப்பட்டனவென்றும் 17,879 பேர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனரென்றும் 1956 நவம்பர் திங்கள் முடிய இந்த கணக்கு என்றும் இலங்கைப் பிரதிநிதித்துவ சபையில் பிரதம மந்திரி பண்டாரநாயகா தெரிவித்துள்ளார்.

அம்பர் சர்க்காவும் துணி உற்பத்தியும்

டில்லி அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, டிச. 10—

நடப்பு திட்ட ஆண்டில் மொத்தம் 39,40,000 சதுர கெச துணி உற்பத்தி செய்யப்படும் என்றும், இதற்காக 35,000 அம்பர் சர்க்காக்கள் வர்த்தக ரீதியில் இயங்கி வருவதாகவும், 70,000 நூல் நூற்பவர்களும் 9000 நெசவாளர்களும் 1,000 தச்சு வேலைக்காரர்களும் அமர்த்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் சதீஷ் சந்திரா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

'உரிமையை மறுக்கையில் மரியாதை மறைகிறது'

வாஷிங்டன், டிச. 12—

"உரிமையும் சுதந்திரமும் மறக்கப்படும்போது, மனிதனுடைய மதிப்பும், மரியாதையும் மறக்கப்படுகிறது. அங்கே அமைதி நிலவ முடியாது; இந்த உண்மையைச் சமீபத்தில் உணர்ந்தோம் உங்கள் குரலை ஒலிக்கும ஐ. நா. நிறுவனத்திடம் எல்லா மக்களும் நாடுகளும கவனம் செலுத்த வேண்டும" என்று ஐ. நா. செயலாளர் ஆமர் ஜோக்டு 'மனித உரிமை நாள்' அன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை

அசாமில் நிறுவுமாறு மக்கள்சபை உறுப்பினர்கள் கோரிக்கை

புதுடில்லி, டிச. 11—

அசாம் மாநிலத்தின் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பண்டித நேருவிடம் தந்துள்ள ஒரு மகஜரில், அசாம் மாநிலத்தில எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நிறுவவேண்டும் என்று கோரியுள்ளனர்.

இந்தியாவின் தொழில் முன்னேற்றத்தைக் கருதியும், பல்வேறு மாநிலங்களின் தேசியத் தொழில திட்ட முன்னேற்றங்களையொட்டியும், போக்குவரத்து சாதன நன்மையைக் கருதியும் அத்தொழிற்சாலையை அசாமில் அமைப்பதே உசிதமானதாகும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனராம்.

மண் அரிப்புத் தடுப்புத் திட்டம்

தென்னாற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுமாம்

சென்னை, டிச. 10—

தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டாம்புலியூர் பிர்க்காவில் நடைமுறை ஆண்டில் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் மண் பாதுகாப்புத் திட்டத்தை சென்னை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதற்கு ரூ. 3,25,000 முதலீடு தேவைப்படுகிறது.

ஆண்டுதோறும் நடைமுறைக்கு ரூ. 44,500 செலவாகுமாம்.

மண் அரிப்பைத் தடுப்பதால் பயன்பெறும் விவசாயிகள் ரூ. 2,53,900 திருப்பித் தரவேண்டும், 20 ஆண்டு தவணையில் திருப்பித் தரவேண்டும். முதல் தவணை வேலை முடிந்ததும் 2 ஆண்டுகளுக்குப்பின் செலுத்தவேண்டும் என்று தெரியவருகிறது

ஏழு சிமெண்டு தொழிற்சாலைகள்

ரூ. 9 கோடி மூலதனத்தில் ஆந்திராவில் ஏற்படும்

புதுடில்லி, டிச. 12—

'சீக்கிரமே ஏழு புதிய சிமெண்டு தொழிற்சாலைகள் ஆந்திரத்தில் திறவப்படும்' என்று, மனுபாய் ஷா என்ற கனரகத் தொழில் மந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தொழிற்சாலைகளுக்கான மூலதனம் 8 முதல் 9 கோடி ரூபாய்வரை இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலைகள், தனிப்பட்ட முதலாளிகளால் துவக்கப்படவிருக்கிறது என்றும், சர்க்கார் இத்தொழிற்சாலைக்குத் தங்களாலான எல்லா உதவிகளும் செய்வர் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

துணிக்கு சுங்க வரி

20 கோடி ரூபாய் கிடைக்குமாம்

சென்னை, டிச. 11—

'துணிமீது விற்பனை வரிக்குப் பதிலாக மத்திய அரசாங்கம் சுங்க வரி விதித்தால் ரூ. 20 கோடி வருமானம் கிடைக்கும்' என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இம்மாதிரி சர்க்கரை, புகையிலை மீதும் சுங்கவரி விதித்தால் என்ன தொகை கிடைக்கும் என்று வெளிப்படுத்தப் போதிய புள்ளி விவரங்கள் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

விவசாயிகளுக்குப் புதிய எருக்கள் விநியோகம்?

சென்னை, டிச 12—

அரசாங்க வாணிபத் திட்டத்தின் மூலம் ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்டுவரும் அம்மோனியம் சல்பேட் எருவுடன் புதிய எருக்களான அம்மோனியம் நைட்ரேட்டும் யூரியாவும் கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் நிச்சயித்துள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் உரமிடு விளக்கத் திட்டத்தின் விளைவாக, யூரியா எரு-உணவுப் பயிர், வாணிபப் பயிர்களுக்கும அம்மோனியம் சல்பேட், நைட்ரேட் எரு-தோட்டப் பயிர்களுக்கும் நெற்பயிருக்கும் அதிகம் உபயோகிக்கப்படுகின்றன.

சென்னை - ஆந்திர எல்லைத் தகராறு

ஐதராபாத், டிச. 11—

சென்னை - ஆந்திர எல்லைத் தகராறு பற்றி மத்திய அரசாங்க அமைச்சருடன் இம்மாதக் கடைசியில் சென்னையில் பேசுவதற்கு ஆந்திர அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், மேற்கொண்டு பேச வேண்டிய பேச்சுவார்த்தைகள் ஐதராபாத்தில் நடைபெறுவதற்கு காமராசர் இசைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேனுட்டுகொள்ளையன் மேற்கொண்ட முறை

டில்லிப் பேரரசின் நிதி அமைச்சருக்குப் பொருந்துமா?

கல்கத்தா, டிச. 10—

"'ராபின் ஹூட்' டைப் போன்று, நானும் பணக்காரர்களிடமிருந்து பணத்தைப் பறித்து ஏழைகளுக்கு விநியோகித்து வருகிறேன்.

"நான் கொள்ளைக்காரனுக இருப்பினும், பொது மக்களின் நன்மைக்காக நல்ல கொள்ளைக்காரனுகவே இருந்து வருகிறேன்" என்று இந்திய அரசாங்க நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, வரி வசூலிக்கும் தனது பொறுப்பைப் பற்றி வர்த்தக சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சமய சந்தர்ப்பம் தோல்வியைத் தராது?

இந்திய நிதி அமைச்சரின் 'நிலை' அறியாமல் பேச்சு

கல்கத்தா, டிச. 10—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தோல்வியடைந்தால் இந்தியாவின் சனநாயகத்திற்கே ஆபத்து உண்டாகிவிடும்.

"இப்போது நாட்டில் ஓரளவுக்குப் பணவீக்கம் ஏற்பட்டிருக்கிறது; ஆனால், உணவுப் பொருள்கள், உடைகள்போன்ற அன்றாடத் தேவைப் பொருள்கள் பாதிக்கப்படாதவரையில் அதுபற்றிக் கவலைப்படவேண்டியதில்லை"

என்று இந்திய அரசாங்க நிதி அமைச்சர் டி. டி. கே. கூறியுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், சோஷலிச சமூக அமைப்பில் ஏழைகள்மீது அதிக வரியைச் சுமத்த முடியாது என்றும், ஒரு சிலர்மீதே வரிவிதித்து சமய சந்தர்ப்ப யோசனையுடன் நடந்து கொள்ளவேண்டியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

வெளிநாட்டு மூலதனங்கள்

மாநிலங்கள் சபையில் ஒரு விளக்கம்

புதுடில்லி, டிச. 11—

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களை தேசிய மயமாக்கியதினுல் வெளிநாட்டவர் இந்தியாவில் மூலதனம் போடுவது பாதிக்கப்பட்டிருக்கிறது என்று மாநிலங்கள் சபையில் எழுந்த குற்றச்சாட்டினை மத்திய நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மறுத்துரைத்திருக்கிருர்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 42 கோடி முதல் 45 கோடி ரூபாய்வரை வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் முடக்கப்பட்டது என்றும், சர்க்கார், வெளிநாட்டு மூலதனம் பற்றி தமது கொள்கையைத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றனர் என்றும் மந்திரி கூறியிருக்கிருர்.

இலங்கையில்

பிரிட்டிஷ் இராணுவத் தளங்கள்

1957-ல் கைமாறுமாம்!

கொழும்பு டிச 11—

1957-ம் ஆண்டில், இலங்கையில் தனக்குள்ள இராணுவத் தளங்களை இலங்கை சர்க்காரிடம் ஒப்படைத்துவிட பிரிட்டிஷ் சர்க்கார சம்மதித்துவிட்டதாக இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

அவர்கள் தளங்களைக் காலி செய்யும் நிர்ணயமான தேதி, பின்னர் இரு சாராராலும் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவசிபாரிசு

நிபுணர்கள் அறிக்கை பற்றி தகவல்

புதுடில்லி, டிச. 10—

நாட்டில் அலுமினிய உற்பத்தி தொழிலின் வளர்ச்சிக்கான நிபுணர் அறிக்கை இந்திய அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது.

அலுமினியம் உற்பத்தியை இலாபகரமான முறையில் மேற்கொள்ள ஆண்டிற்கு 10,000 டன்னிலிருந்து 20 000 டன் வரை உற்பத்தி செய்ய வேண்டுமென அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறதாம்.

மேலும், ஆண்டுக்கு ரூ. 120-லிருந்து ரூ. 130 விகிதத்தில் மின்சார வசதி கிடைப்பதால் அலுமினியம் உற்பத்தியை இலாபகரமான அடிப்படையில் மேற்கொள்ளுவது சாத்தியமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை மாநிலத்தில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மேட்டூரில் ஆண்டிற்கு 10,000 டன் அலுமினியம் செய்வதற்கான உற்பத்திச் சாதனமொன்றை அமைக்கலாம் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தகவலை மக்கள் சபையில் அமைச்சர் மொரார்ஜி தேசாய் தெரிவித்திருக்கிருர்.

ரூ. 17½ கோடி செலவில்

பால் பண்ணைகளாம்!

'சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய நகரங்களில் பால் பண்ணைகளை ஏற்படுத்தி, பால் விநியோகம் செய்ய கூட்டுறவுச் சங்கங்களை நிறுவ இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 17½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது,' என்று மக்கள் சபையில் உணவு அமைச்சர் அறிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் விவசாய உற்பத்தி

உயர்த்துவதற்குத் திட்டம்

சென்னை, டிச. 10—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னை மாநிலத்தில் விவசாய உற்பத்தியை 32 சதவிகிதமாக உயர்த்த சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

தற்போது ஒரு இலட்சம் ஏக்கர் நிலத்தில் பசும் தாள் பயிரிடப்படுகிறது; இதை 50 இலட்சம் ஏக்கராவாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது

தற்போது ஆண்டுக்கு 60,000-டன் சல்பேட் உரம் தேவைப்படுகிறது; இரண்டாவது திட்ட காலத்தில் இதை 2 இலட்சம் டன்னுக உயர்த்த யோசனை செய்யப்பட்டுள்ளது.

ரூபாய் நோட்டுக்கள் அச்சிட

தேவைப்படும் காகிதம்

டில்லி தொழிற்சாலை கட்டுகிறது

புதுடில்லி, டிச. 11—

கரன்சி நோட்டுகள் அச்சடிப்பதற்குத் தேவையான காகிதம் உற்பத்தி செய்வதற்காக ஒரு தொழிற்சாலையை டில்லி சர்க்கார் சீக்கிரமே நிறுவுவார்கள் என்று தெரியவருகிறது.

இந்தத் தொழிற்சாலையை நிறுவுவது பற்றி சில வெளிநாட்டு நிபுணர்களுடன் டில்லி ஆலோசனை நடத்திவருவதாக மந்திரி ஏ. சி. குஹா மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

இந்தத் தொழிற்சாலையை எங்கு நிறுவுவது என்ற விஷயம் இன்னும் முடிவாகவில்லையாம்

இப்போது கரன்சி நோட்டுகளுக்குத் தேவைப்படும் காகிதம், இங்கிலாந்திலிருந்துதான் இறக்குமதியாகிறதாம்.

1955—56-ம் ஆண்டில் மட்டும் ரூ. 1,27,59,000 பெறுமான காகிதம் இறக்குமதி செய்யப்பட்டதாம்.

ரூ. 17,930 மதிப்புள்ள சொத்து

மீட்கப்பட்டதாம்

புதுடில்லி, டிச. 11—

அரியலூரில் நடைபெற்ற விபத்தின்போது, ரூ. 17,930 மதிப்புள்ள இறந்தவர்களின் சொத்துக்கள் மீட்கப்பட்டதாகவும், டிசம்பர் 2-ந் தேதிவரையில் ரூ. 9,660 மதிப்புள்ள சொத்துக்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் உதவி இரயில்வே அமைச்சர் ஷா நவாஸ்கான் மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

ரூ. 11,914 மதிப்புள்ள தங்கம் கைப்பற்றப்பட்டதாம்

புதுடில்லி, டிச 11—

நடைமுறை ஆண்டில் மார்ச் திங்கள் 31-ந் தேதியிலிருந்து இது வரையில், ரூ 11,914 பெறுமான முள்ள தங்கம் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குக் கடத்தப்படும் போது கைப்பற்றப்பட்டதாக மக்கள் சபையில் ரெவினியூ அமைச்சர் அறிவித்துள்ளார்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மேற்கொள்ளும் 'முறை'

முழு அளவில் வெற்றி பெற்று விட்டதாக அமைச்சர் கூற்று

மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிவருவதைக் கட்டுப்படுத்துவதற்குக் கையாளப்படும் 'ரிதம்' முறை நூற்றுக்கு நூறு வெற்றி தந்துள்ளதாம்.

'புத்திசாலித்தனமாகவும் எச்சரிக்கையுடனும் கையாளப்படும் இடங்களில் மட்டும்தான் இம்முறை வெற்றியைத் தந்துள்ளது' என்று மக்கள் சபையில் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்

கிராமப் பகுதிகளில், குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றிப் பிரச்சாரம் செய்வதென இறுதியாக இந்திய சர்க்கார் முடிவு செய்து விட்டனராம்.

இரண்டாவது திட்ட காலத்தில் கிராமங்களில் 2,000 கிளினிக்குகள் ஏற்படுத்தப்படும்; இதில், 316 கிளினிக்குகள் முன்னமேயே திறக்கப்பட்டுள்ளன.

ரூ. 41 கோடி மதிப்புள்ள தானியங்கள் நாசமாம்!

புதுடில்லி, டிச. 11—

இந்த ஆண்டில் பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் இலட்சக்கணக்கான டன் தானியங்கள் நஷ்டமேற்பட்டுள்ளதாம்.

நஷ்டத்தின் மதிப்பு சுமார் ரூ. 41 கோடியிருக்கும் என்று மத்திய விவசாய அமைச்சர் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

சீனக் குடியரசுத் தலைவர்

ஆங்கிலம் கற்கிருர்

சீனக் குடியரசுத் தலைவரான மா-சே-துங் ஆங்கிலம் கற்றுவருகிருர் என்றும், தினம் நான்கு வார்த்தைகள் கற்றுவருகிருர் என்றும் தெரியவருகிறது.

இந்தத் தகவலை, பிரதமர் சௌ-யென்-லாய் கூறியிருக்கிருர். தினம் ஆங்கிலம் கற்றுவரும் மா-சே-துங், ஒரு நாள்கூட தன் வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லையாம்!

மதுரை நகரசபை 'கார்ப்பரேஷன்' ஆகாது?

நிதி அம்சம் தடையா?

மதுரை, டிச. 10—

மதுரை நகரசபையை 'கார்ப்பரேஷன்' ஆக்கும் திட்டம் இப்போதைக்கு இல்லை என்றும், நிதி அம்சம் சரிவர இல்லாததே அதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

சென்னை அரசாங்கம், மதுரை-இராமநாதபுரம் வர்த்தக சபைக்கு இதை அறிவித்துள்ளது.

செங்கோட்டை தாலுகா

நெல்லை மாவட்டத்துடன் சேர்த்துவிட சர்க்கார் முடிவு

சென்னை, டிச. 12—

செங்கோட்டை தாலுகாவில் வாழும் மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப, கன்னியாகுமரி மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் செங்கோட்டைப் பகுதியை, நெல்லை மாவட்டத்திலுள்ள சேரன்மாதேவி வட்டத்துடன் டிச. 15-ந் தேதி முதல் இணைத்துவிடுவதென சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

அரியலூர் இரயில் விபத்து

விசாரணை அதிகாரி நேரில் பார்வையிட்டார்

திருச்சி, டிச. 12—

அரியலூர் இரயில் விபத்துபற்றி விசாரணை நடத்துமாறு டில்லிப் பேரரசால் நியமிக்கப்பட்ட நீதிபதி பாசு, விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த விபத்தைப் பற்றி அரசாங்கத்திற்கு ஆதரவாக வாதாட நியமிக்கப்பட்டுள்ள வி. டி ரங்காச்சாரியும் உடன் சென்ருர் என்று தெரியவருகிறது.

இரயில்வே இலாகாவுக்கு அதிகச் செலவாம்!

புதுடில்லி, டிச. 12—

இந்திய அரசாங்க இரயில்வே இலாகாவுக்காக இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட ரூ. 7,46,00,000 அதிகமாகச் செலவாகியுள்ளதாம்.

அதற்கான உப-மானியக் கோரிக்கை மக்கள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

தலைமை நிலையச் செய்தி:

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

29—12—56

சனியன்றும்

பொதுக்குழுக் கூட்டம்

30—12—56

ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்

'அறிவகம்' சென்னை
5—12—56
—தலைமைக் கழகம் (தி. மு. க.)

உறுப்பினர் புதுப்பித்தல்

திராவிட முன்னேற்றக் கழகத்தில், சென்ற தடவை உறுப்பினராயிருந்து, இரண்டாவது முறையாக இப்போது புதுப்பித்துக்கொள்ளாதவர்கள், 1956 டிசம்பர் திங்கள் 31-ம் நாளுக்குள் உறுப்பினராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளாவிடில், தாமாகவே கழகப் பொறுப்புகளிலிருந்தும் உறுப்பினர் உரிமையிலிருந்தும் நீங்கிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

'அறிவகம்' சென்னை-13 24-11-'56. — பொதுச் செயலாளர், தி. மு. கழகம்

செய்திச் சுருள்

★

வ. ஆ. மாவட்ட பீடித் தொழிலாளர்சங்க அமைப்பு

2—12—56 காலை 11 மணிக்கு, தோழர் சு. திராவிடமணி தலைமையில் வ. ஆ. மாவட்ட பீடித் தொழிலாளர் சங்கக் கிளை அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. எம். துரைசாமியை தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழுவும், மற்றும் 7 பேர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

குடந்தை இளைஞர் தமிழ் மன்றப் பொதுக்கூட்டம்

2—12—56 மாலை 6 மணிக்கு, குடந்தை தவரங்குறிச்சியில் இளைஞர் தமிழ் மன்றச் சார்பில் தோழர் ஏ. கே. வெங்கடாச்சி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் கே. கே. நீலமேகம், எஸ். ஆர். ராதா, மற்றும் பலர் நெசவாளர் குறை பற்றியும், பொதுத் தேர்தல் குறித்தும் பேசினர். இறுதியில் தோழர் டி. கே. சீனிவாசன் 'ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டதை எடுத்துக் காட்டி சொற்பொழிவாற்றினர். தோழர் இளம்வழுதி துணைவியார் மறைவுக்கும், அரியலூர் இரயில் விபத்தில் மாண்டோருக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

வேலூர் கே. வி. கே. சாமி மன்றம்

2—12—56ல் நடைபெற்ற வேலூர் கே. வி. கே. சாமி மன்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில், விரைவில் மன்றத் துவக்க விழாவும் தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்பு விழாவும் நடத்துவதென்றும், நெடுங் கடைவீதியில் மன்ற அலுவலகம் அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வடகோவை தி. மு. க. சொற்பயிற்சி மன்றம்

1—12—56 மாலை 6½ மணிக்கு, வடகோவை தி. மு. கழகக் கட்டிடத்தில் சொற்பயிற்சி மன்றச் சார்பில் தோழர் க. வெற்றிவேந்தன் தலைமையில் 'நாட்டுப் பிரிவினையும் நமது பணியும்' எனுந் தலைப்பில் தோழர்கள் பலர் பேசினர். பின்னர் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

பரமக்குடி பாரதிதாசன் படிப்பகம் அமைப்பு

21-11-56 இரவு 9½ மணிக்கு, தோழர் ஐயாதுரை தேநீர் நிலையத்தில், தோழர் ஏ. சுப்பிரமணியம் தலைமையில் மேற்படி படிப்பகம் அமைக்கப்பெற்றது. தோழர் ஆர். எஸ். பிரகாசம் அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்தல் நிதி வசூலிப்பது என்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தி. மு. கழகத் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

★

திருச்சி :

தேவர் மன்றத்தில்
15—12—56 காலை 9 மணிக்கு
தலைவர் : எம். எஸ். மணி
நாகூர் அனிபா
இன்னிசை வழங்குவார்
இரா. நெடுஞ்செழியன்
'இலக்கிய இன்பம்'
எம். ஜி. இராமச்சந்திரன்
'கலையும் வாழ்வும்'
என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

மதுரை :

தமுக்கம் மைதானம்
திறந்தவெளி அரங்கில்
15—12—56 இரவு 8 மணிக்கு
நாகூர் அனிபா
இன்னிசை வழங்குவார்
இரா. நெடுஞ்செழியன்
'வள்ளுவர் காட்டும்
அரசியல் நெறி'
எம். ஜி. இராமச்சந்திரன்
'நாடும் நடிகர்களும்'
என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

வேலூர் :

நேஷனல் தியேட்டரில்
16-12-56 காலை 10-மணிக்கு
தலைவர் : எம். பி. சாரதி எம்.சி.
அண்ணா
என். வி. நடராசன்
ஆகியோர் பேசுவர்

★

கோவில்பட்டி :

பாப்புலர் டாக்கீசில்
16-12-56 காலை 10-மணிக்கு
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பேசுவர்.

தூத்துக்குடி :

டெல்பின் தியேட்டரில்
16—12—56 மாலை 4-மணிக்கு
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பேசுவர்.

★

துறையூர் :

பாரதி தியேட்டரில்
17—12—56 காலை 9-மணிக்கு
தலைவர் : டி. பி. அழகமுத்து
இரா. நெடுஞ்செழியன்
'சங்க கால அரசியல்'
எம். ஜி. இராமச்சந்திரன்
'கலையும் கழகமும்'
என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

நாமக்கல் :

ராஜா டாக்கீசில்
17—12—56 மாலை 3-மணிக்கு
இரா. நெடுஞ்செழியன்
எம். ஜி. இராமச்சந்திரன்
பேசுவர்.

வட ஆற்காடு மாவட்டத்தில் தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் — கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

திருவண்ணாமலையில்:

14-12-56 வெள்ளி இரவு 10-மணிக்கு

குடியேற்றத்தில்: [ஒரே நாளில் இரண்டு நாடகங்கள்]

15-12-56 சனி மாலை 6-மணிக்கு, இரவு 10-மணிக்கு

திருப்பத்தூரில்:

16-12-56 ஞாயிறு இரவு 10 மணிக்கு

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! கழகம் வெற்றி முரசு கொட்ட கடமையாற்றத் திரண்டு வாரீர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★

தி.மு.க. தேர்தல் நிதி திரட்டும் வாரம்

கிளைக் கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே!

இம்மாதம் 10-ந் தேதி முதல் 16-ந் தேதி வரையுள்ள ஒரு வார காலம் தேர்தல் நிதி திரட்டும் வாரம் என்பதை அறிவீர்!

ஊர்தோறும், வீதிதோறும், வீடுகள்தோறும் சென்று நிதிதிரட்டித் தலைமை நிலயத்திற்கு உடன் அனுப்பித்தர வேண்டுகிறோம்.

கழகம் வெற்றி முரசு கொட்ட கடமையாற்றுவீர்!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

"பொதுச்செயலாளர் அறிக்கைக்கிணங்க, திருச்சி மாவட்டத்தில் ஆங்காங்கே உள்ள கிளைக் கழகத் தோழர்கள் இவ்வாரம் முழுமையும், அந்தந்தப் பகுதிகளில் உண்டியலேந்தித் தேர்தல் நிதி திரட்ட வருவார்கள். கழகத் தோழர்களும் பொதுமக்களும் இயன்ற அளவு பொருளுதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"நிதி வசூலிக்கும் கழகத் தோழர்கள் சிறந்த முறையில் தேர்தல் நிதி வசூலித்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி, மாவட்டக் கழகத்திற்குத் தகவல் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, திருச்சி மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் அன்பில்-தருமலிங்கம் அறிவிக்கிறார்.

ஐ.சி.எஸ். அதிகாரிக்கு 5-ஆண்டு கடுங்காவல்; ரூ. 45 இலட்சம் அபராதம்

இந்திய உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தள்ளுபடியாயிற்று

புதுடில்லி, டிச. 13—

இரண்டாவது உலகப் போரின் போது, பர்மா அகதிகள் நிறுவன முன்னாள் அதிகாரியாக இருந்த எஸ். கே. கோஸ் என்ற ஐ. சி. எஸ் அதிகாரி, அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை மோசடி செய்ததாகவும் சதி செய்ததாகவும் வழக்குத் தொடரப்பட்டது.

விசாரணை செய்த விசேட டிரிபியூனல், அவருக்கு 5 ஆண்டுக் காலம் கடுங்காவல் தண்டனையும் ரூ 45 இலட்சம் அபராதமும் விதித்தது.

தண்டனையை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் அவர் மனுச் செய்து கொண்டார்; நீதிபதிகள் மனுவைத் தள்ளுபடி செய்து, தண்டனையை உறுதி செய்தனர்.

சென்னை—வண்ணை இளைஞர் முன்னேற்றமன்ற உறுப்பினர்கட்கு :

15—12—56-ந் தேதிக்குள், சென்னை—வண்ணை (4-வது வட்டம்), மணிகண்ட முதலி 6-வது தெருவில் உள்ள இளைஞர் முன்னேற்ற மன்ற உறுப்பினர்கள் அனைவரும், தாங்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையை மன்றச் செயலாளரிடம் செலுத்திவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

15—12—56 காலை, சேலம் 6-வது வட்டம் செவ்வாய்ப்பேட்டை தோழர் எ. முருகேசன் கரி மண்டியில் 'வடநாடும் தென்னாடும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

கிணத்துக்கடவு :
பொன்மலை அடிவாரத்தில்
15-12-56 மாலை 4-30 மணிக்கு
பேசுவோர் :
கோவை-செழியன்
சு. ஆறுமுகம்
பி. என். இராமானுசம்

கடலூர் நகர தி.மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

15—12—56 இரவு 9 மணிக்கு, புதுப்பாளையம் தோழர் இரெ. இளம்வழுதி இல்லத்தில் கடலூர் நகரக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தேர்தல் நிதி, திராவிடர் திருநாள், கழக வளர்ச்சிக்கான செயல்முறைகள் குறித்து ஆராயப்படும்.

மணமான மாதரும் பணிபுரியலாம்!

புதுடில்லி, டிச. 12—

இந்திய வெளிநாட்டுத் துறைகளில் மணமான மாதர்கள் பணியாற்றுவதற்கு இந்திய அரசாங்கம் தடை விதித்திருந்தது; இப்போது இந்தத் தடையை நீக்கி, மணமான மாதரும் பணிபுரியும் வாய்ப்புகளை இந்திய அரசாங்கம் உண்டாக்கியிருக்கிறது.

இரா. நெடுஞ்செழியன் இரங்கலுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

புறத்தில், சதுப்பு நிலத்தில்—சாக்கடை ஓரத்தில்—சேரிகளில் வாழவேண்டும் என்று தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கிற — அடக்கி வைக்கப்பட்டிருக்கிற வகுப்பிலிருந்து கிளம்பியவர், டாக்டர் அம்பேத்கார்.

"அவர் படிக்கத் துவக்கிய நாட்களில், எத்தனை பேர்—'உனக்கேனடா படிப்பு? உனக்கெல்லாம் படிப்பு வருமா? உன்போன்றவர்கள் எல்லாம் படித்து என்னடா செய்யப் போகிறீர்கள்? நீங்கள் எல்லாம் படிக்கத் துவங்கினால் தெருக் கூட்டுவதையும் கக்கூஸ் சுத்தம் செய்வதையும் யாரடா பார்ப்பார்கள்?' — என்று கேலி பேசியிருப்பார்கள்?

"அத்தனை இழி சொற்களையும் அவல தரும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டல்லவா டாக்டர் அம்பேத்கார் படித்திருக்கிறார்?

"சென்னை போன்ற பெரிய நகரங்களில் வேண்டுமானால் இன்று தீண்டாமைக் கொடுமை வெளித் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும், 'பார்ப்பனருக்கு மட்டுமே இந்த வீடு வாடகைக்கு விடப்படும்' என்ற போர்டுகள் இந்த 1956-ம் ஆண்டிலும் கூட, சென்னை போன்ற நகரங்களிலும் காணமுடிகிறது. இக்கேகூட — இந்த 1956-ம் ஆண்டில்கூட இந்த நிலைமை என்றால், இன்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பு நிலைமை எவ்வாயிருந்திருக்கும்?

"இன்றுகூடக் கிராமங்களில், 'தாழ்த்தப்பட்டவர்கள் நல்ல தெருக்களில் வரக்கூடாது; கிணறுகளில் தண்ணீர் இறைக்கக் கூடாது,' என்று ஒதுக்கிவைக்கப்படுவதை நாம் காண்கிறோம்.

"உயர்ந்த சாதிக்காரர் என்று கூறிக்கொள்கிறவர்கள் வீட்டில் எருமை நுழையலாம்; நாய் படுத்துறங்கலாம்; பால் பானையை பூனை உருட்டலாம்; ஆனால் மனிதர்களில் சிலர், உயர்ந்த சாதிக்காரர் வாழும் தெருக்களில் நடமாடக் கூடாது; வீடுகளை நெருங்கக் கூடாது—என்றால், இந்தக் கொடுமையை என்னென்பது?

"இந்தக் கொடுமைகளினூடே தான் டாக்டர் அம்பேத்கார், படித்தார்; பட்டங்கள் பல பெற்றார்.

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்துவெளிவரும்)

இந்தியாவில் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி 1946-ல் மொத்தம் 22,450 டன்னாக இருந்தது 1955-ல் 3,93,100 டன்னாக உயர்ந்துவிட்டது.

பிரிட்டிஷாருக்குச் சொந்தமான எண்ணெய் வயல்கள்

அராபியர் வெடி வைத்துத் தகர்த்துவிட்டனராம்

லண்டன், டிச 13—

சவூதி அரேபியாவில் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான குவாயத் பகுதியிலுள்ள எண்ணெய்க் கிணறுகளை அராபியர்கள் வெடி வைத்துத் தகர்த்துவிட்டனராம்.

மொத்தம் 16 குண்டுகள் உபயோகிக்கப்பட்டன வென்றும், பெருஞ் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஒரு பெரிய எண்ணெய்க் குழாயும் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்துஸ்தான் கப்பல் தளத்தில், 1955—56-ம் ஆண்டில் நடைபெற்ற வேலைகளின் மொத்த மதிப்பு ரூ 2,46,07,000 ஆகும். அதற்கு முந்திய ஆண்டில் மொத்தம் ரூ 2,10,84,001 மதிப்புக்கு வேலைகள் நடைபெற்றன.

தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

பொதுச்செயலாளர்
இரா. நெடுஞ்செழியன்
புரட்சி நடிகர்
எம். ஜி. இராமச்சந்திரன்
ஆகியோர் சுற்றுப்பயணம்

டிசம்பர் 15 :	காலை	....	திருச்சி
	மாலை	....	மதுரை
16 :	காலை	....	கோவில்பட்டி
	மாலை	....	தூத்துக்குடி
17 :	காலை	....	துறையூர்
	மாலை	....	நாமக்கல்

குறிப்பு :—மேற்கண்ட ஊர்கள் தவிர வேறு எந்த ஊருக்கும் இப்பொழுது வருவதற்கு இயலாததலால், வேறு யாரும் இப்பொழுது அழைப்பு விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நரிடநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.